நெல்லை
மாலை
முரசு



# கர வருட
# சித்திரை புத்தாண்டு பலன்கள்

12-4-2011

# கர வருட பலன்கள்

கணித்தவர்:- ஜோதிடர் நெல்லை சங்கர சுப்பிரமணியன்

| | | | |
|---|---|---|---|
| செ புத குரு | சூரி | | ல |
| சுக் | கரவருட ராசி | | |
| | | | சந் |
| ரா | | | சனி |

கரவருட மாரிபெய்யுங் காசினிமுய்யும் உரமிகுந்து வெள்ளமெங்குமோடும் நிரைமிகுத்து நாலுகாற் சீவன் நோயால் மடியும் பாலது நெய்யுமே சுருங்கும் பார் –இடைக்காடர்

இதன் பொருள்

இந்த வருடம் அதிகமான மழை பெய்யும். நாடு எங்கும் வெள்ள பெருக்கு ஏற்படும். இதனால் போக்குவரத்து பாதிப்பு இயற்கை மாற்றம் ஏற்படும். வெள்ள பாதிப்பால் விவசாயம் மற்றும் மின்சார பாதிப்பு ஏற்படும்.

நான்கு கால் விலங்குகளான பசு, ஆடு, மற்றும் மாடு, போன்ற விலங்குகளுக்கு நோய் ஏற்படும். இதன் காரணமாக பால் உற்பத்தியும், நெய் மற்றும் எண்ணெய் பொருட்கள் விலை அதிகரிப்பும், பொருட்கள் தட்டுப்பாடும் ஏற்படும்.



இந்த வருடத்தின் பெயர் : கர

வருடம் பிறக்கும் நேரம்: காலை 11.28

வருடம் பிறக்கும் நட்சத்திரம்: மகம்

கிழமை: வியாழன், ராசி: சிம்மம்

லக்கனம்: மிதுனம், திதி: ஏகாதசி

கரணம்: வனிசை

யோகம்: கண்டம்

சூரியன் மேஷ ராசியில் நுழையும் நாள்தான் வருடத்தின் ஆரம்பம் ஆகும். சூரியன் மேஷ ராசியில் ஏப்ரல் 14–ம் தேதி வருடம் ஆரம்பம் லீப் வருடத்தில் ஏப்ரல் 13–ம் தேதி வருடம் ஆரம்பம் ஆகும்.

தமிழ் வருடங்களுக்கு 60 பெயர் உண்டு. இந்த பெயர் ஒவ்வொரு ஆண்டும் சுழற்சி முறையில் வரும்.

இந்த வருடத்தின் நவகிரகங்கள் பதவிகள்

சந்திரன்– ராஜா

குரு–மந்திரி

புதன்–படைதளபதி

சூரியன்–நீர்பாசனம், நீர்வளம்

சுக்கிரன்– உணவு பொருள்

செவ்வாய்– ராஜ அதிபதி

**பொதுபலன்- பொருளாதாரம்**

வருடம் வியாழக்கிழமை பிறப்பதாலும் குரு மந்திரியாக இருப்பதாலும் நாட்டில் பொருளாதாரம் நல்ல மேன்மை அடையும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் நல்ல முன்னேற்றத் தால், அண்ணிய செலவாணி அதிகமாக கிடைக்கும். வெளிநாட்டினர் வருகையும் அவர்களால் தொழில் வளர்ச்சி ஏற்படும்.

**அரசியல்**

இந்த வருடம் மக நட்சத்திரத்தில் பிறப்பதாலும், வருடத்தில் லக்கனம் உபயமாக இருப்பதாலும் இந்த வருடம் அரசியலில் ஆட்சி மாற்றம் ஏற்படும்.

இந்த வருடத்தின் ராஜாவாக சந்திரன் வருவதால் ஆட்சி மாற்றம் பெண்களால் நிர்வாகம் செய்யும் ஆட்சி ஏற்படும்.

ஸ்திர தன்மை இல்லாதது

14–4–2011 வருடம் பிறக்கும் நேரம் 11–28. இதை வைத்து கணக்கிடும் பொழுது லக்கனாதிபதி புதன் நீசம் பெற்று செவ்வாய் சேர்க்கை பெற்று வக்கிர சனி பார்வையுள்ளதால் ஆட்சி நீண்டகால (ஆட்சி முழுவதும்) ஆட்சி செய்ய முடியாமல், குழப்பம் மற்றும் சூழ்ச்சியின் காரணமாக பதவி விலக நேரிடலாம்!

இயற்கை வளம்

நீர் அதிபதியாக சூரியன் வருவதால் இயற்கை சீற்றம் ஏற்படாது. இயற்கையான தட்ப வெப்பம் இருக்கும். இதனால் விவசாயம் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இயற்கை வளம் பெருகும்.



ஜோதிடர் நெல்லை

எஸ்.சங்கரசுப்பிரமணியன்